ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1793/5 - 2013 ජනවාරි 15 වැනි අඟහරුවාදා - 2013.01.15

*1793/5 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*3 இ பிரிவின் கீழான கட்டளை*

*2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மீது 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் உற்பத்தி வரி செலுத்துவதிலிருந்து வரி விலக்களிக்கப்பட்டுள்ளதாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*2012, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 1747/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மேற்குறித்த சட்டத்தின் 3இ பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2013, சனவரி 15.*

**அட்டவணை I**

***(1) இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம்/பொருட்கள் :***

*(அ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 2000.04.07 ஆந் திகதிய 165 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அதற்குப் பிற்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப வெளிநாட்டு தூதுவராலயங்களில் கடமையாற்றும் இலங்கை இராஜதந்திரியொருவரினால் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் ;*

*(ஆ) இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் செய்து கொண்ட பல்வேறு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள்;*

*(இ) அரச அலுவலரொருவரினால் 1999.10.08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு செய்யப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் ;*

*(ஈ) நாட்டுக்காக அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளார் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் ; அல்லது அவருக்கு அன்பளிப்பாக கிடைக்கப்பெறும் வாகனம் ;*

*(உ) இலங்கைத் தேச கட்டுமான முறியின் ஆரம்ப உரிமையாளரினால் திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கைக்கு ஏற்ப சலுகை அடிப்படையிலான வரி வீதத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள்.*

2. அரசாங்கத்தின் விசேட கட்டளையின் மூலம் திறைசேரிச் செயலாளரினால் வழங்கப்படும் அனர்த்த மற்றும் மீள் கட்டமைப்பு தொடர்பான விசேட கட்டளைகளுக்கு அமைவாக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள்.

3. கைத்தொழிற்துறை அமைச்சரினால் சிபாரிசு செய்யப்பட்ட 30% க்கு குறையாத பெறுமதி சேர்ப்புடன் புதிய வாகன உதிரிப்பாகங்களைப் பொருத்தி உள்ளூரில் பொருத்தப்பட்ட/தயாரிக்கப்பட்ட வாகனங்கள், எனினும் இ. ப. இலக்கம் 87.03 இன் பிரகாரம், இந்த விலக்களிப்பு மேலே விடயம் (3) இல் உரித்துடைய நிபந்தனைகளுக்கு அமைய II ஆவது அட்டவணையில் காண்பிக்கப்பட்ட இ. ப. இலக்கத்தின் கீழ் உட்படுகின்ற வாகனங்களுக்கு மட்டும் உரித்துடையதாகும்.

4. கைத்தொழில் துறை அமைச்சரினால் சிபாரிசு செய்யப்பட்ட 30% க்கு குறையாத பெறுமதி சேர்ப்புடன் உள்ளூர் தேவைக்காக பொருத்தப்பட்ட உற்பத்தி செய்யப்படுகின்ற இ. ப. இல. 84 மற்றும் 85 ஆகிய தலைப்புகளுக்கு உட்படுகின்ற பொருட்கள்.

5. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள பயணிகள் பிரயாண மூடைகள் (விலக்களிப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் தீர்வையின்றி அப்புறப்படுத்துவதற்கு உரித்துடைய பொருட்கள் யாவும்.

6. கப்பல் இருப்புப் பொருட்களாக அல்லது மீள் ஏற்றுமதிக்காக உபயோகிப்பதற்கு பிணையிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்கள்.

7. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவைகளும் இலங்கையினுள் எந்த ஏற்றுமதியாளருக்கும் வழங்கப்பட்டவைகளும், அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பது பற்றி உற்பத்தி வரிப் பணிப்பாளர் அதிபதி திருப்தியுறும் வண்ணம் போதிய அளவு சான்று வழங்கப்பட்டுள்ளவைகளுக்குமான பொருட்கள் யாவும்.

8. திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்துடன் பதிவு செய்யப்பட்ட மலர்ச்சாலைகளினால் இறக்குமதி செய்யப்பட்ட பிரேத வாகனங்கள்.

9. திரட்டிய நிதியினை உபயோகித்து அரச நிறுவனங்களினால் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் அனுமதியுடன் நிதிக் குத்தகை அடிப்படையில் அல்லது நேரடியாக கொள்வனவு செய்வதனூடாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனம்.

10. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் II ஆம் பிரிவின் (ஊ) 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதனைப் போன்று, நாட்டினது பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் இனங் காணப்பட்டதும் அரசாங்கத்தினால் வரி செலுத்தப்பட வேண்டியதுமான, ஏதும் விசேட கருத்திட்டமொன்றினை அமுல்படுத்துவதற்குத் தேவையான வாகனம்.

11. வியாபார தீர்வைகள் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் 2010/01 ஆம் இலக்க சுற்று நிருபம், அதற்குப் பிற்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப, அரச உத்தியோகத்தர் ஒருவரினால் குறித்த, சலுகைகளுடன் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம்.

12. உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்/பிரதித் தலைவர் என்பவரினால் உள்ளூராட்சி மாகாண சபைகளின் 2011/01 ஆம் இலக்க சுற்று நிருபம், அதற்குப் பிற்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப, குறித்த சலுகைகளுடன் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் .

13. விமான நிலையம் என்ற வியடத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் விதித்துரைப்பின் பேரில், விமான நிலையம் மற்றும் விமானம் சேவைகள் (ஸ்ரீ லங்கா) நிறுவனத்தினால் விமானப் பயணிகள் போக்குவரத்திற்காக, விமான நிலையத்திற்கு ஏற்றி வருவதற்கும் அவர்களை வெளியே கொண்டு செல்வதற்கும், செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தினை வைத்திருக்கும் ஒருவரினால், மேற்குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் 5 வருடங்களுக்குக் மேற்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றுக்குப் பதிலாக, அதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக் கொள்ளளவு 1,500 சீ. சீ. க்கு குறையாத புதிய (Brand New) மோட்டார் வாகனம் ஒன்று இறக்குமதி செய்யப்படும் போது அதற்காக செலுத்தப்படவேண்டியிருக்கும் மொத்த வரியின் 60% ஆகவும் பாவித்த வாகனம் ஒன்று இறக்குமதி செய்யப்படும் போது செலுத்தப்படவேண்டியிருக்கும் மொத்த வரியின் 50% ஆகவும் குறைத்தும், செலுத்தப்பட வேண்டியிருக்கும் உற்பத்தி வரியினைக் குறைத்தல்.

**அட்டவணை II**

**பெற்றோல் வாகனங்கள் :**

| த. பெ. த இல. (1) | த. பெ. குறியீடு (2) | விபரம் (3) |
|---|---|---|
| 87.03 | | **(87.02 தலைப்பிலானவை தவிர) ஸ்ரேசன் வெகன் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலாக, பிரதானமாக பிரயாணிகளது போக்குவரத்துக்காக வடிவமைக்கப்பட்ட மோட்டார் கார்கள் மற்றும் பிற மோட்டார் வாகனங்கள்.** |
| | 8703.21 | உருளைக் கொள்ளளவானது 1,000 சி. சி. க்கு மேற்படாதவை |
| | | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை. |
| | 8703.21.69 | பிற |
| | | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை. |
| | 8703.22.59 | பிற |
| | | உருளைக் கொள்ளளவானது 2,000 சி. சி. க்கு மேற்படாத, இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள். |
| | 8703.23.52 | பிற, உருளைக் கொள்ளளவானது 1,600 சி. சி க்கு மேற்படாதவை |

**டீசல் வாகனங்கள் :**

| த. பெ. த. இல. (1) | த. பெ. குறியீடு (2) | விபரம் (3) |
|---|---|---|
| | 8703.31 | உருளைக் கொள்ளளவானது 1,500 சி.சி. க்கு மேற்படாதவை |
| | 8703.31.70 | ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலான மோட்டார் கார்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவை |
| | | உருளைக் கொள்ளளவானது 2000 சி. சி. க்கு மேற்படாதவை 2 வருடங்களுக்கு மேற்படாத, ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலாக, மோட்டார் கார்கள் |
| | 8703.32.51 | உருளைக் கொள்ளளவை 1600 சி. சி. க்கு மேற்படாதவை |
| | 8703.32.59 | பிற |
| | | உருளைக் கொள்ளளவானது 2000 சி. சி. க்கு மேற்பட்ட 2 வருடங்களுக்கு மேற்படாத ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்களும் அடங்கலாக, மோட்டார் கார்கள் |
| | 8703.32.71 | அதிக பாரத்தைத் தாங்கும் படிமுறை வகை (டெலர் டைப்) அடிச்சட்டம் மீது முடிச்சு மூலம் பொருத்துப்பட்டமொனோ கொக் அல்லாத பாகங்கள் இணைக்கப்படாது பாகமுடையதும், நிரந்தரமாக நாலு சில்லுகளும் இயந்திரம் மூலம் இயங்கக்கூடிய மற்றும் 800 கிலோ கிராமுக்கு கூடிய பாரத்தை சுமக்கத்தக்க சாரதி அடங்கலாக 7 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் (வயது வந்தவர்கள்) பயணிப்பதற்கான வாகனங்கள். |
| | 8703.32.79 | பிற |

2 - 339

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானிகளை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.